**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.50/2023** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W.12** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| **Name :** | கண்ணன் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **02.09.2025**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பெரம்பலூரில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். இறந்துபோன ராமகிருஷ்ணணை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் ராமகிருஷ்ணனின் மனைவி மற்றும் மகன் ஆவார். 2வது எதிரியை காவல்நிலையத்தில் இருப்பதாக சொன்னார்கள். நானும் பார்க்கபோனேன். என் முன்னிலையில் 2ம் எதிரியை விசாரிக்கவில்லை. கொலை செய்ததை ஒப்புக்கொண்டதாக சொன்னார்கள். நான் கையெழுத்து செய்தேன். என்னுடன் வேல்முருகன் கையெழுத்து செய்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது ஆகும். அது அ.சா.ஆ.12 ஆகும். போலிசார் விசாரித்தார்கள்.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் எனக்கு உறவினர்கள் கிடையாது. நீண்ட நாள் பழக்கம். என் முன்னிலையில் போலிசார் விசாரிக்கும்போது 2வது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகளை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் அவர்களை பார்த்து கொண்டு தான் இருக்கிறேன். ராமகிருஷ்ணண் இறந்துவிட்டதாக பொதுமக்கள் சொன்னார்கள். அதன்பிறகு நான் வீட்டிற்குபோனேன். அங்கு உறவினர்கள் இருந்தார்கள் பெயர் தெரியாது. நான் போகும்போது போலிசார் இல்லை. 09.00 மணிக்கு நான் போனேன். அதன்பிறகு இறப்பு சம்மந்தமாக நான் எங்கும் செல்லவில்லை. காவல்துறையினர் நான் இறந்தவரின் உறவினர் என்பதால் கையெழுத்து போடுங்கள் என்று சொன்னதால் போட்டேன் என்றால்சரிதான். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றவிவரம் எனக்கு தெரியாது. அதன்பின்னர் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

**மறுவிசாரணை**:இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.